**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **CC513/2004** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for | Prosecution : | **PW - 39** |
| | Defence : | |
| | Court : | |

| | | |
|---|---|---|
| Name | : | கிருஷ்ணமூர்த்தி |
| Father's / Husband Name | : | நந்தகோபால் |
| Village | : | கொத்தத்தெரு, அய்யம்பேட்டை, பாபநாசம் தாலுக்கா |
| Taluk | : | தஞ்சாவூர் மாவட்டம் |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2018 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.07.2018**

**என்னால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி.கண்ணகி (பெஞ்ச் கிளார்க்)படி நிலை 3, தட்டச்சர் ச.சுரேஷ்**

**CC513/2004** Date: 30.07.2018

முதல் விசாரணை

நான் தஞ்சாவூர் மாவட்டம், கொத்தத்தெரு, அய்யம்பேட்டை, பாபநாசம் தாலுக்காவில் குடியிருந்து வருகிறேன். நான் நெசவுத்தொழில் செய்து வருகிறேன். அசா1ஐ தெரியாது. ஆஜர் 1வது எதிரியை தெரியும். வழக்கின் மற்ற எதிரிகளை தெரியும். நான் தஞ்சாவூர் அய்யங்கடை வீதியில் உள்ள கணபதி என்பவர் நடத்தி வரும் நகை அடகு கடையில் பணம் செலுத்துவதற்காக சென்றிருந்தேன். ரூ.150ஐ சரஸ்வதி என்ற எனது மகளின் பெயரில் பணம் கட்டியிருந்தேன். மொத்தம் 17தவணைகள் கட்டியிருந்தேன். மொத்தம் ரூபாய் 2,000ம் வரை கட்டியிருந்தேன். தொடர்ச்சியாக பணம் செலுத்த இயலாததால் பணத்தை திருப்பி தருமாறு ஆஜர் 1வது எதிரியிடம் கேட்டேன். அதற்கு அவர் 25மாதங்கள் கட்டினால்தான் பணத்தை திருப்பி தர முடியும் என்று கூறினார். அதன் பிறகு 4,5முறைகள் அந்த கடைக்கு சென்று பார்த்தேன் அப்போது கடை பூட்டியிருந்தது. இது தொடர்பாக நான் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் பணம் கட்டியதற்கான காமதேனு சேமிப்புத்திட்டத்தின் கீழ் என் மகள் சரஸ்வதி பெயரில் கட்டியதற்கான பாஸ் புத்தகம் சா.பொ.79ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

போலீசார் விசாரணையில் மொத்தம் 17தவணை கட்டியதாக சொல்லியுள்ளேன் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மகள் சரஸ்வதிக்கு சம்பவ காலத்தில் வயது 15, 16இருக்கும். நான் முன் விசாரணையில் சொன்னவாறு காமதேனு சேமிப்பு திட்டத்தில் நான் நேரடியாக பணம் கட்டவில்லை என்றால் சரியல்ல. இரண்டு முறை நான் நேரில் செலுத்தியிருக்கிறேன். மீதி தவணைகளை ஏஜெண்ட் என் வீட்டில் வந்து வாங்கிக் கொண்டார். நான் காவல்நிலையத்திற்கு செல்லவில்லை. போலீசிடம் நான் தஞ்சாவூர் மாவட்ட குற்றப்பிரிவில் எழுத்து மூலமாக புகார் கொடுத்தேன். போலீசார் சொல்லிக் கொடுத்ததன் பேரில் முன் விசாரணையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல ரூ.150செலுத்தியதற்கான ரசீதினை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் முன் விசாரணையில் சொல்லியுள்ளவாறு எந்த சீட்டிலும் சேரவில்லை என்றாலும், பணம் செலுத்தவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.